Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, நவம்பர் 29, 2021

## நெஸ்லே லங்கா நிறுவனம் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நிலைபேண்தகைமை பேணும் நிறுவனத்திற்கான விருதுகளில் சுற்றுச்சூழல் நிலைபேண்தகைமைக்காக சிறந்த பெறுபேறுகளுடன் வென்றுள்ளது

**நான்கு சிறந்த நிறுவன நிலைபேண்தகைமை விருதுகளை வென்றுள்ளது**

நெஸ்லே லங்கா நிறுவனம் 2021 ஆம் ஆண்டுக்கான சிறந்த நிலைபேண்தகைமை பேணும் நிறுவனத்திற்கான விருதுகளில் நான்கு விருதுகளைத் தனதாக்கியுள்ளது. பூமி என்ற பிரிவின் கீழ் பூமிக்கு நன்மை செய்வதில் அதன் வலுவான முயற்சிகளுக்கு கிடைத்துள்ள அங்கீகாரமாக, சுற்றுச்சூழல் மீது நிறுவனத்தின் அர்ப்பணிப்பு, வணிகத்திற்கு அப்பாற்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுச்சூழல் நிலைபேண்தகைமைக்காக சமூகம்-பூமி-இலாபம் ஆகியவற்றில் சிறந்த மும்முனைப் பெறுபேறுகளுக்கான விருது ஆகிய பிரிவுகளில் வென்றுள்ளது. 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சிறந்த 10 நிறுவனங்களில் ஒன்று என்ற விருதையும் நெஸ்லே லங்கா நிறுவனம் பெற்றுள்ளது. இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்ற இந்த மதிப்புமிக்க வருடாந்த நிகழ்வானது, மக்கள், பூமி மற்றும் இலாபம் ஆகிய மும்முனை இலக்குடனான செயற்திறனை அடைவதில் நிறுவனத்தின் முயற்சிகளுக்காக நிலைபேண்தகைமையில் முன்னின்று செயற்படும் நிறுவனங்களை அங்கீகரிக்கிறது.

“நமது நுகர்வோர் மற்றும் சமூகத்திற்கு நற்காரியங்களை ஆற்றும் அதே வேளையில், நமது பூமிக்கு நன்மை விளைவிப்பதற்கு நாங்கள் ஆற்றும் பங்களிப்புக்காக அங்கீகரிக்கப்படுவது ஒரு கௌரவமும், பாக்கியமுமாகும். மீளுருவாக்கம் செய்யப்படக்கூடிய உணவு முறைகளை பாரிய அளவில் மேம்படுத்த முயற்சிக்கும் அதே வேளையில் எமது செயற்பாடுகள் மூலமான உமிழ்வை பூச்சிய மட்டமாக்குவதை நோக்கி எங்கள் பயணத்தை விரைவுபடுத்தியுள்ளோம். பண்ணையிலிருந்து உணவுத்தட்டு வரை எமது முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம், மீள்சுழற்சி செய்யக்கூடிய அல்லது மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொதியிடல் முறைகளை நாடுவதன் மூலமாக பிளாஸ்திக் மாசுபாட்டைச் சமாளிப்பது, மற்றும் சுழற்சிப் பொருளாதாரத்தை உருவாக்க உதவுவது உள்ளிட்ட பல முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இந்த ஆண்டு நாங்கள் எங்களுடைய Ready-to-Drink பான தயாரிப்புகளுக்கு paper straw வை அறிமுகப்படுத்தி, இலங்கையில் நுண்ணுயிர் நீக்கிய பான அட்டைப் பெட்டிகளுக்கான சேகரிப்பு உள்கட்டமைப்பு மற்றும் மீள்சுழற்சி வசதியை ஸ்தாபிக்க உதவினோம். நமது பூமியைப் பேணிப் பராமரிப்பதில் நடத்தை மாற்றத்தை மேம்படுத்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் நாங்கள் தொடர்ந்து ஒன்றிணைந்து பணியாற்றி வருகிறோம். மேலும், ஒவ்வொரு ஆண்டும் நமது உற்பத்தித் திறனை அதிகரிக்கும் அதே வேளையில், அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கங்களில் முதலீடு செய்வதன் மூலம் எரிசக்தி, நீர் மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் உமிழ்வு போன்ற வளங்களின் பயன்பாட்டைத் தொடர்ந்து குறைக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்கிறோம் என்று பெருமையுடன் கூறுகிறோம். எங்கள் முயற்சிகளுக்கு அங்கீகாரம் கிடைப்பது உண்மையிலேயே ஊக்கமளிக்கிறது. இது ஒரு நீண்ட பயணத்தின் ஆரம்பம். எங்கள் மதிப்புச் சங்கிலியில் உள்ள அனைத்து தரப்பினருடனுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், பசுமையான இலங்கைக்கு பங்களிப்பதில் நன்மைக்கான ஒரு சக்தியாக நாங்கள் தொடர்ந்து செயற்படுவோம்,” என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஜேசன் அவன்சென்யா அவர்கள் குறிப்பிட்டார்.

*நல்லுணவு, நல்வாழ்வுக்கான* நிறுவனம் நாட்டின் முதல் 10 சிறந்த வர்த்தக நிறுவனங்கள் மத்தியில் அங்கீகரிக்கப்படுகின்றமை தற்போது ஏழாவது ஆண்டாகும். நெஸ்லே நிறுவனம் இலங்கையின் சிறந்த நிறுவனமாக இரண்டு முறை முடிசூடியுள்ளதுடன், நாட்டிற்கு ஆற்றி வருகின்ற நேர்மறையான பங்களிப்பிற்கான இனங்காணல் அங்கீகாரமாக, சமூக உறவுகள், பணியாளர்கள் உறவுகள், வாடிக்கையாளர் உறவுகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய இந்த மதிப்புமிக்க நிகழ்வில் கடந்த காலங்களில் தொடர்புடைய பிரிவு, துறை மற்றும் சிறப்பு செயற்திட்டங்களுக்கான 18 விருதுகளை வென்றுள்ளது.

சிறந்த நிலைபேண்தகைமை பேணும் நிறுவனத்திற்கான விருதுகள் இலங்கையின் மிக உயர்ந்த நிறுவனரீதியான கௌரவமாக பரவலாகக் கருதப்படுகிறது. இது உள்நாட்டு பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கு சிறந்த வகையில் பங்களிப்பாற்றுகின்றவர்களையும், நிறுவன நிலைபேண்தகைமையில் சிறந்த செயல்திறன் கொண்டவர்களையும் அங்கீகரிக்கிறது. இதற்கான நுழைவு விண்ணப்பங்கள் உள்நாட்டு வல்லுநர்கள், கல்விமான்கள் மற்றும் சிந்தனைத் தலைவர்களைக் கொண்ட மிகவும் மரியாதைக்குரிய நடுவர் அணியால் மதிப்பீடு செய்யப்படுகின்றன.